**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**

**விருதுநகர் மாவட்டம் (இ) ஸ்ரீவில்லிபுத்தூர்**

**முன்னிலை:-திரு.க.ஜெயக்குமார், பி.எல்.,எல்.எல்.எம்.,**

**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி**

**2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02ம் நாள் செவ்வாய்கிழமை**

**I.A.No.07/2025 & I.A.No.08/2025**
**in**
**O.S.No.21/2018**

**I.A.No.07/2025**
1.அ.சீனிவாசன்
2.விஜயகுமார் ...மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

**/எதிர்/**

M/s.ஸ்ரீ லலிதாம்பிகை காட்டன் ஏஜென்சீஸ்
கூட்டு நிறுவனத்திற்காக அதன்
பங்குதாரர் P.V.சுப்பிரமணியராஜா மூலம் ...எதிர்மனுதாரர்/வாதி

**I.A.No.08/2025**
1.அ.சீனிவாசன்
2.விஜயகுமார் ...மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

**/எதிர்/**

M/s.ஸ்ரீ லலிதாம்பிகை காட்டன் ஏஜென்சீஸ்
கூட்டு நிறுவனத்திற்காக அதன்
பங்குதாரர் P.V.சுப்பிரமணியராஜா மூலம் ...எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுக்கள் 07.11.2025-ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, இரண்டு மனுக்களிலும் மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.சொ.சங்கரநாராயணன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.அ.சுவாதீஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும்,

இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>பொதுவான உத்தரவு</u>**

**I.A.No.07/2025**

இம்மனுவானது, கடந்த 01.09.2025ம் தேதியில் முடிக்க பெற்ற மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தினை ரீ-ஓப்பன் செய்ய உத்தரவிட வேண்டி U/s.151 of CPC-ன் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**I.A.No.08/2025**

இம்மனுவானது, மனுவில் கூறியுள்ள காரணங்களுக்காக தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி, ராஜபாளையம் கிளையில் உள்ள வாதியின் வங்கி கணக்கு எண்.0731050310875074 தொடங்கப்பட்ட தேதி, கணக்கு தொடக்கத்திற்கான விண்ணப்ப படிவம், வங்கி கணக்கின் தன்மை மற்றும் மேற்படி கணக்கின் 01.12.2014ம் தேதி முதல் 31.06.2015ம் தேதி வரை உள்ள காலத்திற்கான வரவு செலவு பட்டியல் ஆகியவற்றின் சான்றிட்ட நகல்களுடன் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி அவற்றை ஆஜர் செய்து அவை குறித்து வாய்மொழி சாட்சியம் அளிக்க மேற்படி வங்கி கிளை மேலாளர் அவர்களுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட வேண்டி under Order 16 Rule 1 & Sec.151 of CPC ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>I.A.No.07/2025 & I.A.No.08/2025 மனுக்களின் சுருக்கம்</u>:-**

2) இந்த வழக்கில் கடந்த 01.09.2025ம் தேதிய வாய்தாவில் பிரதிவாதிகள் தரப்பு முதலாவது சாட்சியான (DWI) ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு அன்றைய தினமே தங்களது தரப்பில் வேறு சாட்சி இல்லை என்று மேற்குறிப்பு செய்ததன் அடிப்படையில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி முடிக்கப்பட்டது. மேற்படி வழக்கு விவாதத்திற்காக 11.09.2025ம் தேதிக்கு வாய்தா ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தங்களுடைய வழக்கறிஞரை சந்தித்து வழக்கு பற்றி கலந்து ஆலோசித்தபோது இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பு கட்சியை நிரூபிப்பதற்காக வாதியின் வங்கி கணக்கு உள்ள தமிழ்நாடு

மெர்க்கண்டைல் வங்கி, ராஜபாளையம் கிளையில் வாதியின் வங்கி கணக்கு எண்.0731050310875074 தொடங்கப்பட்ட தேதி, கணக்கு தொடக்கத்திற்கான விண்ணப்ப படிவம், வங்கி கணக்கின் தன்மை மற்றும் மேற்படி கணக்கின் 01.12.2014 ம் தேதி முதல் 31.06.2015 ம் தேதி வரை உள்ள காலத்திற்கான வரவு செலவு பட்டியல் ஆகியவற்றின் சான்றிட்ட நகல்களை நீதிமன்றத்திற்கு ஆஜர் செய்து அவை குறித்து வாய்மொழி சாட்சியமளிக்க மேற்படி வங்கி கிளை மேலாளர் அவர்களுக்கு அழைப்பாணை அனுப்ப சம்மன் அனுப்பி வரவழைத்து விசாரிக்க வேண்டியது அவசியம் என்று கூறியதால், மேற்படி சாட்சியம் தங்கள் தரப்பு எதிர்வாதத்தை நிரூபிக்க அவசியமானவை.

3) மனுதாரர்கள் தரப்பு சாட்சியத்தை முடித்து மேற்குறிப்பு செய்த நிகழ்வு வேண்டுமென்றோ, விருப்பப்பட்டோ ஏற்பட்டதல்ல. மேலும் வாய்மொழி சாட்சியம் தாக்கல் செய்ய அனுமதித்து கடந்த 01.09.2025 ஆம் தேதியில் முடிக்கப் பெற்ற பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தை ரீ–ஓப்பன் செய்து உத்தரவிட வேண்டியது அவசியமானது. பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தை ரீஓப்பன் செய்ய அனுமதியளிக்காத பட்சத்தில் பிரதிவாதிகள் தரப்பை நிருபிக்க இயலாத நிலை ஏற்பட்டு அதனால் பிரதிவாதிகளுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்பட்டுவிடும். மேலும் மேற்படி ஆவணங்களின் நகல்களுடன் மேற்படி வங்கி மேலாளர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்ப வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே, பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தை ரீ–ஓப்பன் செய்து மேற்படி ஆவணங்களின் நகல்களுடன் மேற்படி வங்கி மேலாளர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்ப உத்தரவிட வேண்டி இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, மனுப்படி உத்தரவு பிறப்பிக்ககோரி மனுதாரர்களால் பிரார்த்திக்கப்படுகிறது.

**<u>I.A.No.07/2025 & I.A.No.08/2025 மனுக்களில் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–</u>**

4) எதிர்மனுதாரர்/வாதி கூட்டாண்மை நிறுவனத்தின் ஒரு பங்குதாரர் ஆவார். மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. இதனடியில் தெளிவாக ஒப்புக் கொள்ளப்படும் விவரங்கள் தவிர மனுதாரர்கள் மனுவில் சொல்லியுள்ள மற்ற விவரங்கள் பொய்யென்றும், உண்மைக்கு புறம்பானவை மறுக்கப்படுகிறது. அவைகள் ஒவ்வொன்றையும் மனுதாரர்களே கண்டிப்பாய் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு கடந்த 28.01.2015ம் தேதி சாட்சிகள் முன்னிலையில் கைரேகை பதிவு செய்து கையொப்பம் செய்து எழுதிக் கொடுத்துள்ள கடனுறுதி சீட்டின்படியும், மேற்படி கடனுறுதி சீட்டில் கண்ட கடன் தொகைக்கு ஒரு பகுதியாக மனுதாரர்கள் நிறுவனத்தால் கையாளப்படும் பெடரால் வங்கி காசோலை எண்.000703-ஐ கடந்த 19.01.2018ம் தேதி வாதிக்கு கொடுத்துள்ள நிலையில் மனுதாரர்கள் செலுத்த வேண்டிய கடன் தொகையை வட்டியுடன் வசூலிப்பதற்காக இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

5) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மற்றும் வாதிக்கு இடையே கடன் பெற்றவர், கடன் கொடுத்தவர் என்ற உறவு இல்லை என்றும், 28.01.2015ம் தேதி சாட்சிகள் முன்னிலையில் கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுக்கவில்லை என்றும், மேற்படி கடனுறுதி சீட்டு அதில் சாட்சியாக கையொப்பமிட்டுள்ள இராஜசேகரனிடம் கொடுத்தது என்றும் எதிர்கட்சி செய்து வருகின்றனர். மேலும் மனுதாரர்கள் கையெழுத்து செய்த கைரேகை வைத்த பூர்த்தி செய்யப்படாத புரோநோட்டுக்கள் மற்றும் பூர்த்தி செய்யாத கையொப்பமிட்ட காசோலைகளை வாதியிடம் ஒப்படைவு செய்ததாகவும் கூறி அதனை நிரப்பி வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், கூறி எதிர்கட்சி செய்து வருகின்றனர்.

6) இந்நிலையில் மனுதாரர்கள் தரப்பில் பி.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்ட சாட்சி வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்த சமயம் ஒப்புக் கொண்ட விவரங்களை முரண்படுத்தும் விதத்திலும் ஒப்புக் கொண்ட

சங்கதிகளை நிரப்பும் விதத்திலும் அசல் வழக்கில் வீண் குழப்பத்தினை ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் பிரதிவாதிகள் தரப்பில் தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி, இராஜபாளையம் கிளை மேலாளருக்கு அழைப்பாணை அனுப்ப கோரி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்களுக்கு அசல் வழக்கில் நல்ல கட்சியில்லை. மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியில் உள்ள வாதியின் வங்கி கணக்கு எண்.0731050310875074 சம்பந்தப்பட்ட விவரங்கள் அசல் வழக்கினை முடிவு செய்வதற்கு எவ்விதத்திலும் தொடர்பு அற்றவையாகும். எனவே, மேற்படி வங்கி கணக்கு சம்பந்தமாக சாட்சி விசாரணை செய்வதற்காக மேற்படி வங்கியின் இராஜபாளையம் கிளை மேலாளரை விசாரணை செய்ய அழைப்பாணை அனுப்ப கோரியுள்ளது சட்டப்படி தள்ளுபடி செய்ய தகுந்ததாக உள்ளது. மேலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை செண்ட்பார் செய்யக் கோரி நடவடிக்கை எடுக்காத நிலையில் வங்கி மேலாளரை மேற்படி ஆவணங்களுடன் வந்து சாட்சியம் அளிக்குமாறு அழைப்பாணை அனுப்ப கோரியுள்ள மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் சாட்சி விசாரணை செய்ய கோரியுள்ளது அசல் வழக்கினை தீர்மானிக்க தேவையற்றதாகும். மேலும் மனுதாரர்கள் தூய்மையான கரத்துடன் நீதிமன்றத்தினை அணுகவில்லை. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கப்படும் பட்சத்தில் வாதிக்கு ஏகப்பட்ட கஷ்டங்களும், இழப்புகளும் ஏற்படக் கூடியதாக இருக்கிறது. ஆகவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்திரவிட வேண்டி இந்த எதிர்மனுதாரரால் பிரார்த்திக்கப்படுகிறது.

7) இம்மனுக்களில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், இ.ம.எண்.7/2025 மற்றும் இ.ம.எண்.8/2025 மனுக்கள் அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

8) இம்மனுக்களில் உபய தரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, ஆவண

சாட்சியமோ இல்லை.

9) இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது.

<u>பிரச்சினைக்கான தீர்வு</u>:–

10) தாவா அசல் வழக்கு என்பது தாவா வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட கடனுறுதி சீட்டின் அடிப்படையில் மனுதாரர்கள் செலுத்த வேண்டிய கடன் தொகையை வட்டியுடன் வசூலிப்பதற்காக வாதியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு. வாதியின் வழக்கினை எதிர்த்து பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சியங்கள் முடிந்து வாதி தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 முதல்நிலை விசாரணை குறுக்கு விசாரணை முடிந்து பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, வழக்கு வாதத்திற்காக நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கில் 01.09.2025ம் தேதி முடிக்கப்பட்ட பிரதிவாதிகள் தரப்பு சாட்சியை ரீ ஓப்பன் செய்து மனுவில் கூறியுள்ள ஆவணங்களின் நகல்களுடன் மேற்படி வங்கி மேலாளர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்ப உத்தரவிட வேண்டும் என்று கூறி மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

11) எதிர்மனுதாரர்/ வாதி தரப்பில் மேற்படி ஆவணங்கள் மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியில் உள்ள வாதியின் வங்கி கணக்கு எண்.0731050310875074 சம்பந்தப்பட்ட விவரங்கள் அசல் வழக்கினை முடிவு செய்வதற்கு எவ்விதத்திலும் தொடர்பு அற்றவையாகும் என்றும், மேற்படி வங்கி கணக்கு சம்பந்தமாக சாட்சி விசாரணை செய்வதற்காக மேற்படி வங்கியின் இராஜபாளையம் கிளை மேலாளரை விசாரணை செய்ய அழைப்பாணை அனுப்ப கோரியுள்ளது சட்டப்படி தள்ளுபடி செய்ய தகுந்ததாக உள்ளது என்றும், மேலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை செண்ட்பார் செய்யக் கோரி நடவடிக்கை

எடுக்காத நிலையில் வங்கி மேலாளரை மேற்படி ஆவணங்களுடன் வந்து சாட்சியம் அளிக்குமாறு அழைப்பாணை அனுப்ப கோரியுள்ள மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், எனவே, இந்த இரண்டு மனுக்களையும் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதிட்டார்.

12) வழக்கு வாதத்திற்காக நிலுவையில் இருக்கும் இந்நிலையில் தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி, ராஜபாளையம் கிளையில் உள்ள வாதியின் வங்கி கணக்கு எண்.0731050310875074 தொடங்கப்பட்ட தேதி, கணக்கு தொடக்கத்திற்கான விண்ணப்ப படிவம், வங்கி கணக்கின் தன்மை மற்றும் மேற்படி கணக்கின் 01.12.2014ம் தேதி முதல் 31.06.2015ம் தேதி வரை உள்ள காலத்திற்கான வரவு செலவு பட்டியல் ஆகியவற்றின் சான்றிட்ட நகல்களுடன் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி அவற்றை ஆஜர் செய்து அவை குறித்து வாய்மொழி சாட்சியம் அளிக்க மேற்படி வங்கி கிளை மேலாளர் அவர்களுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட வேண்டி மனுதாரர்களால் மனு தாக்கல் செய்துள்ள நிலையில், பி.சா.1 வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்த சமயம் ஒப்புக்கொண்ட விவரங்களை முரண்படுத்தும் விதத்திலும் ஒப்புக்கொண்ட சங்கதிகளை நிரப்பும் விதத்திலும் அசல் வழக்கில் வீண் குழப்பத்தினை ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதாக வாதி கூறும் நிலையில், எதிர்மனுதாரர்/வாதி தன்னுடைய பிராதில் "வாதி நிறுவனம் பிரதிவாதிகளுக்கு கடன் கொடுத்ததை வாதி பராமரித்து வரும் நாள்வழி குறிப்பு மற்றும் பேரேட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேலும், பிரதிவாதிகள் இருவரும் சேர்ந்து நடத்தி வரும் M/s.சொர்ண கணபதி டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் LLP என்ற நிறுவனத்தின் பங்குதாரர் ஸ்தானத்தால் கையாளப்படும் பெடரல் பேங்க் வங்கி காசோலை எண்.000703 நாள் 19.01.2018ம் தேதியிட்டு ரூ.10,00,000/−க்கான கடனுறுதி சீட்டு தொகைக்காக காசோலையை வழங்கி உள்ளதாகவும், மேற்படி காசோலையை வாதி வசூலுக்கு வங்கியில் செலுத்த வேண்டாம் என்று

பிரதிவாதிகள் கூறி பின்னர் மேற்படி தொகையை திருப்பி செலுத்தாத நிலையல் தான் பிரதிவாதிகள் செலுத்த வேண்டிய கடன் தொகையை வட்டியுடன் வசூலிப்பதற்காக இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு தாக்கல்" என்று பிரதிவாதிகளுக்கு எதிராக வங்கி விவரங்களின் அடிப்படையில் தான் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் பிரதிவாதிகள் அவர்கள் தரப்பு வழக்கினை நிரூபிப்பப்பதற்கு அவர்களுக்கு முழு வாய்ப்பு வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மேற்படி ஆவணங்கள் என்பது வாதி சம்பந்தபட்ட ஆவணங்களாக காணும்நிலையில், வழக்கானது கடனுறுதி சீட்டின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்ற நிலையில், மேற்படி வங்கி கிளையில் தங்களுக்கு வங்கி கணக்கு இல்லை என்று வாதி தரப்பில் ஆட்சேபிக்காத நிலையில், மேற்படி மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு வழக்கினை நிரூபிக்க வாய்ப்பு வழங்க வேண்டியது அவசியமானது என்பதால், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கூறும் வாதத்தினை பொறுத்து அசல் வழக்கில் நிரூபணம் செய்து கொள்ள வாய்ப்புள்ளது என்பதால் தற்போதைய மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதக நிலை ஏற்பட வாய்ப்பில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள காரணங்களை கருத்தில்கொண்டு, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தை மறுதிறப்பு செய்து, மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை அல்லது பிரதான வழக்கு சம்பந்தமான வங்கி கணக்கு விவரங்களை ராஜபாளையம் தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி, கிளை மேலாளர் அவர்கள் மூலம் வரவழைத்து அவரை இந்த வழக்கின் சாட்சியாக விசாரிக்க அனுமதியளித்து அவ்வாறே இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**I.A.No.07/2025**

**13) முடிவாக,** மனுதாரரின் இ.ம.எண்.7/2025 மனு அனுமதிக்கப்படுகிறது. பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தை மறுதிறப்பு (reopen) செய்ய அனுமதியளித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

**<u>I.A.No.08/2025</u>**

**14) முடிவாக,** மனுதாரரின் இ.ம.எண்.8/2025 மனு அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் இம்மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை அல்லது பிரதான வழக்கு சம்பந்தமான வங்கி கணக்கு விவரங்களை ராஜபாளையம் தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி, கிளை மேலாளர் மூலம் வரவழைத்து அவரை இந்த வழக்கின் சாட்சியாக விசாரிக்க அனுமதியளித்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K JEYAKUMAR Digitally signed by K JEYAKUMAR

**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**விருதுநகர் மாவட்டம் (இ)**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**<u>உபய தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை**

K JEYAKUMAR Digitally signed by K JEYAKUMAR

**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**விருதுநகர் மாவட்டம் (இ)**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்
ஸ்ரீவில்லிபுத்தூர்
I.A.No.7/2025 & I.A.No.7/2025
in
O.S.No.21/2018
பொதுவான உத்தரவு
02.12.2025